1.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No.2524/2021

PROSECUTION WITNESS L.W.10/P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | : கோவிந்தராஜ் | Caste | : |
| Father's Name | : கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 ம் எதிரி ஆஜர் இல்லை.  2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 23.01.2025

முதல் விசாரணை

1) நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று ஓய்விலிருந்து வருகிறேன்.

2) கடந்த 20.02.2021 ம் தேதி, புகார் மனுதாரர் லட்சுமணன் என்பவர் புகார் கொடுத்தன் பேரில் தலைமைக் காவலர் 311 இம்தியாஷ் அகமது கான் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். அன்றே 20.02.2021 ம் தேதி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பகல் 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரகாஷ், கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகள் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் சாட்சிகள் இருவரும் கையொப்பம் செய்தார்கள். (**20.02.2021 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் லட்சுமணன், சக்திவேல், சாதிக்பாட்ஷா, சத்யா, பிரகாஷ், கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 23.02.2021 ம் தேதி இவ்வழக்கில் கண்ட வாகனங்களான TN86 A 9795 Jupiter மற்றும் TVS XL TN86 A 2728 ஆகிய இரு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு ஆவணங்களுடன் அனுப்பி வைத்தேன். 24.02.2021 ம் தேதி, இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டு வழக்கில் கண்ட எதிரிகள் சையது சாலிக், சாமியப்பன் ஆகியோர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டு நிலையம் வந்து ஆஜரானவர்களை அன்றே மாலை 16.00 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்வதற்கான காரணத்தைக் கூறி அவர்கள் இருவரையும் கைது செய்தேன். பின்பு அவர்கள் இருவரையும் மேலதிகாரி உத்தரவுப் படி தக்க ஜாமீனில் விடுவித்தேன். தேர்தல் நேரம் என்பதால் என்னை அம்மா பேட்டை காவல் நிலையத்திற்கு பணி மாறுதல் செய்யததால் இக்கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் வசம் கோப்புகளை ஒப்புவித்து நான் பணி மாறுதலில் சென்றுவிட்டேன்.

4) நான் அவருடன் பணிபுரிந்ததால் அவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் மோகன்ராஜ் புலன் விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்தும் 17.04.2021 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சிவக்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற்றார். **( 23.02.2021 ம் தேதியிட்ட TN86 A 9795 Jupiter மற்றும் TVS XL TN86 A 2728 ஆகிய வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) அன்றையதினமே சாட்சி 1 க்கு சிகிச்சை செய்த மருத்துவர் பாலகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரிடமிருந்து லட்சுமணனின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றுள்ளார்.

**(லட்சுமணனின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** லட்சுமணனுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டபிரிவை 279, 337 இதசவிலிருந்து, 279, 338 இதசவாக மாற்றி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இறுதியாக தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவு 279, 338 இதசவின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். உறவினருடன் கலந்து பேசி புகார் கொடுப்பதாக புகார்தாரர் கூறினார். இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் 01.03.2021 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் சரிதான். 1 ம் எதிரியின் வாகனத்தின் எந்த பகுதி சேதமடைந்தது என்று புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரியின் வாகனம் புகார்தாரரின் வாகனத்தின் மீது நேராக மோதியதா, சைடில் மோதியதா என்று புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2) சம்பவ இடம் 3 ரோடுகள் சந்திக்கும் பகுதி என்றால் சரிதான். சம்பவ இட சாட்சிகளான வடிவேல், பாய் பஞ்சர் கடை உரிமையாளர், தியாகராஜன் மாவு மில் உரிமையாளர், ரேஷன் கடை ஊழியர்கள் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் போக்குவரத்து பகுதி நிறைந்த இடம் என்றால் சரிதான். நான் சொன்ன தேதி நேரத்தில் எந்த சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகளின் வாகனங்கள் புகார்தாரர் மீது மோதவில்லை என்றாலும், அவரே கீழே விழுந்ததன் காரணமாக காயம் பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதி நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது  என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் மேற்கண்ட  குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்ளப்படுவதாக தெரிவித்து அனுமதிக்கப்படுகிறது.**